[10th August 1965

5 feet foot-paths on either side. But in view of the limited funds for "Roads" in the Third Plan, the work will have to be considered only during Fourth Plan period.

ஈரோடு சர்வே இலாகா அலுவலர்களுக்கு சம்பளமில்லா விடுமுறை

** 185 கேள்வி.—திரு. எம். எஸ். மணி : கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—*

இந்தியப் பிரதமர் பண்டித நேருவின் மறைவையொட்டி அரசாங்க ஊழியர்கள் அனைவருக்கும் கொடுக்கப்பட்ட விடுமுறை அன்று அலுவலகத்திற்கு வரவில்லை என்று குற்றம் சாட்டி ஈரோடு சர்வே இலாகாவில் பணியாற்றும் ஊழியர்களுக்கு சம்பளம் பிடிக்கப்பட்டது அரசினருக்கு தெரியுமா?

THE HON. SRI V. RAMAIAH : The allegation is baseless.

தஞ்சை மாவட்டத்தில் உச்சவரம்புச் சட்டத்தின் கீழ் வரும் உபரி நிலம்

** 186 கேள்வி.—திரு. ஆ. கு. சுப்பையா : கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—*

(அ) நில உச்சவரம்புச் சட்டத்தின் கீழ், தஞ்சை மாவட்டம், மன்னார்குடி, திருத்துறைப்பூண்டி ஆகிய தாலூகாக்களில் எத்தனை ஏக்கர் நிலங்கள் உபரியாக எடுத்துக் கொள்ளப்பட்டன ?

(இ) அதன் விவரம் என்ன?

THE HON. SRI V. RAMAIAH : (a) The process of taking over of surplus lands from persons holding lands in excess of the ceiling area is in various stages. In Mannargudi and Tiruthuraipoondi taluks of the Thanjavur district, no case has reached the stage of taking over of surplus lands by the Government.

(b) Does not arise.

திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை : இப்போது இந்தச் சட்டத்தின்கீழ் நடவடிக்கை எடுக்கவேண்டிய பொறுப்பு ஆதரைஸ்டு ஆபீசரிடமிருந்து ரெண்ட் கோர்ட்டுக்கு மாற்றப்பட்டிருக்கிறதா? அப்படியானால், அதற்குக் காரணம் என்ன?

கனம் திரு. வெ. ராமைய்யா : இந்த ஆக்டைப் பரிசீலனை செய்ய வேண்டிய பொறுப்பு, நடவடிக்கை எடுக்க வேண்டிய பொறுப்பு ஆதரைஸ்டு ஆபீசருக்குத்தான் இருக்க முடியும். அதை ஆதரைஸ்டு ஆபீசரிடமிருந்து மாற்றி வேறு ஒருவருக்குக் கொடுக்க முடியாது.

திரு. சா. கணேசன் : அமைச்சர் அவர்கள் சொல்லிய பதிலில் இருந்து அந்த இரு தாலூகாக்களிலும் உச்ச வரம்புக்கு அப்பாற்பட்டு நிலங்கள் இருந்து அவை கைக்கொள்ளப் பெறவில்லை என்ற பதில் கிடைக்கிறது. அப்படியானால், இந்த உச்ச வரம்புக்குள் அகப்படக்கூடாது என்பதற்காக முன்னதாகவே அந்த நிலங்களில்